வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 1.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

தமிழ்நாடு, புதுச்சேரி உட்பட இன்று உதய நாள் கொண்டாடும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் மக்களுக்கு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, **புதுச்சேரி விடுதலை நாள்** விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதைகளை ஏற்றுக் கொண்டார்.

புதுச்சேரியில் சாகுபடிப் பரப்பு குறைந்து வருவதைக் கட்டுப்படுத்தும் வகையில், **ஹைட்ரோபோனிக் விவசாயம்** கொண்டு வரப்படும் என, முதலமைச்சர், **விடுதலை நாள் உ**ரையில் தெரிவித்தார்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு **டிரோன்** வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள, **நமோ டிரோன் சகோதரிகள்** திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை, மத்திய அரசு இன்று வெளியிட்டுள்ளது.

*உதயநாள்-வாழ்த்து*

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பஞ்சாப், அரியானா, சட்டீஸ்கர், மத்தியபிரதேஷ் ஆகிய மாநிலங்களும், லட்சத் தீவுகள், புதுச்சேரி ஆகிய யூனியன் பிரதேசங்களும் இன்று உதயநாள் கொண்டாடுவதை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு,

குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் ஆகியோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். சம்பந்தப்பட்ட மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும், நாட்டின் வளர்ச்சிப் பாதையில் ஆற்றி உள்ள பங்களிப்புகளை சுட்டிக் காட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, சமூக ஊடகத்தில் பதிவு வெளியிட்டுள்ளார். மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தொடர்ந்து முன்னேறி, நாட்டின் வளம் மற்றும் அமைதி மற்றும் செழிப்பிற்கு பங்களிக்கட்டும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார். வளமான கலாச்சார பாரம்பரியத்துடன் கூடிய கர்நாடக மாநிலத்தின் மக்கள், பல்வேறு துறைகளில் வளர்ச்சி மற்றும் புதுமையாக்க முயற்சிகளுக்கு உந்து சக்தி வழங்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தமது செய்தியில் கூறி உள்ளார். வனப்பு மிகுந்த கேரள மாநிலத்தின் உழைப்பாளி மக்கள், உலகெங்கிலும் பல்வேறு துறைகளில் முத்திரை பதித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வளமான வரலாறு கொண்ட பஞ்சாப் மாநிலம் நாட்டின் வளர்ச்சியில் எப்போதுமே, கணிசமாக பங்களித்து வந்திருப்பதாகவும், பழங்குடி கலாச்சாரம் மற்றும் நாட்டுப்புற மரபுகளுக்கு பெயர் பெற்ற சட்டீஸ்கர் மாநிலம், வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேறி வருவதாகவும், அவர் கூறி உள்ளார். இயற்கை வளமும், கலாச்சார பாரம்பரியமும் கொண்ட மத்திய பிரதேஷ் மாநிலம், ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சிக்கான புதிய தரநிலைகளை நிர்ணயித்து வருவதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

*விடுதலை நாள்*

பிரஞ்ச் ஆட்சியில் இருந்து புதுச்சேரி விடுதலை பெற்றதைக் குறிக்கும் புதுச்சேரி விடுதலை நாள், இன்று புதுச்சேரியில், அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. முதலமைச்சர் திரு ரங்கசாமி, சிறப்பு விருந்தினராக இவ்விழாவில் கலந்து கொண்டு, தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார். காவல்துறையினர் மற்றும் மாணவ-மாணவியரின் அணி வகுப்பு மரியாதைகளையும் அவர் ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து

பல்வேறு கலைக் குழுவினரின் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம் பெற்றன.

முதலமைச்சர் திரு ரங்கசாமி இவ்விழாவில் பேசுகையில் நகரமயம் காரணமாக சாகுபடி நிலங்களின் பரப்பளவு குறைந்து வருவதைக் கட்டுப்படுத்தும் வகையில் புதுச்சேரியில் ஹைட்ரோபோனிக் விவசாயத்தை அறிமுகப்படுத்த முன்மொழியப் பட்டுள்ளதாக தெரிவித்தார். 120 விவசாயிகளுக்கு 100 சதவிகித மானிய அடிப்படையில் மொத்தம் 72 லட்சம் ரூபாய் செலவில், குச்சித் தீவனம் தயாரிக்கும் இயந்திரங்களும், கால்நடை வளர்ப்போர் 100 பேருக்கு 50 லட்சம் ரூபாய் செலவில் பால் இயந்திரங்களும் வழங்கப்பட உள்ளதாக அவர் கூறினார்.

2007-ஆம் ஆண்டு தமிழக அரசுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி, சாத்தனூர் அணையில் இருந்து நீர் பெற்று அதை சுத்திகரித்து விநியோகிக்க திட்டமிடப் பட்டுள்ளதாக முதலமைச்சர் தெரிவித்தார். அரசுத் தொடக்கப் பள்ளி மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் வகையில், திஷா அறக்கட்டளை மூலம் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளதாக அவர் கூறினார். இணைய குற்றங்கள் மற்றும் சுரண்டல்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்க. இளைஞர்கள் மற்றும் குழந்தைகளின் தலைமைத் துவத்திற்கான அறக்கட்டளையுடன் இணைந்து **குழந்தைகள் பாதுகாப்பு இணைய வழி** என்ற புதுமையான திட்டம் செயலாக்கத்தில் உள்ளதாக அவர் தெரிவித்தார். முக்கிய சுற்றுலாத் தலங்கள் பற்றிய உலகப் பட்டியலில் புதுச்சேரி 2-ஆம் இடம் பிடித்திருப்பது பெருமைக்குரியது என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

புதுச்சேரி விடுதலை நாள் விழாவில் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் அதிகாரிகளும், ஏராளமான பொது மக்களும்

கலந்து கொண்டனர். காரைக்கால், மாகே, ஏனாம் பகுதிகளிலும் புதுச்சேரி விடுதலை நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

காரைக்கால் கடற்கரை சாலையில் நடைபெற்ற விடுதலை நாள் விழாவில் குடிமைப் பொருள் வழங்குத் துறை அமைச்சர் திரு. திருமுருகன் தேசியக் கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதைகளை ஏற்றுக் கொண்டார். புதுச்சேரி விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகங்கள் குறித்தும், காரைக்கால் பகுதிக்கான புதுச்சேரி அரசின் திட்டங்கள் குறித்தும் அவர் உரையாற்றினார். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அவர் பொன்னாடைப் போர்த்தி கவுரவித்தார். மாணவ-மாணவிகள் மற்றும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. காரைக்கால் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மணிகண்டன் மற்றும் உயர் அதிகாரிகளும் ஏராளமான பொது மக்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

ஏனாமில் ஜிஎம்சி பாலயோகி விளையாட்டு அரங்கில் இன்று நடைபெற்ற புதுச்சேரி விடுதலை நாள் விழாவில் மண்டல நிர்வாக அதிகாரி திரு ஆர் முனுசாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்து காவல் துறையினரின் அணி வகுப்பு மரியாதைகளை ஏற்றுக் கொண்டார். பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. புதுச்சேரி அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு மல்லாடிகிருஷ்ணராவ், அரசு அதிகாரிகள் மற்றும் ஏராளமான பொது மக்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

*ந□ோ-டிரோன்*

தீன்தயாள் உபாத்யாயா தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு டிரோன் வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள நமோ டிரோன் சகோதரிகள் திட்டத்தின் அமலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை, மத்திய அரசு இன்று

வெளியிட்டுள்ளது. ஆயிரத்து 261 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டிலான இத்திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டிலும் அடுத்த நிதியாண்டிலும், மொத்தம் 14 ஆயிரத்து 500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு, டிரோன்கள் வழங்கப்பட உள்ளன. மத்திய அரசு நிலையில் வேளாண் துறை செயலர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை செயலர் அடங்கிய அதிகாரக் குழு ஒன்றினால் இத்திட்டம் நிர்வகிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் டிரோன் வாங்கிக் கொள்வதற்கான செலவில் 80 சதவிகிதம், 8 லட்சம் ரூபாய் உச்சவரம்பு அடிப்படையில், மத்திய அரசால் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும். எஞ்சிய தொகையை, மகளிர் சுயஉதவி குழுக்களின் தொகுப்பு நிலை கூட்டமைப்புகள், தேசிய வேளாண் உள்கட்டமைப்பு நிதியத்திடம் இருந்து, கடனாக பெற்றுத் தரும். டிரோன் வாங்கும் மகளிர் சுயஉதவிக் குழுக்களில் இருந்து தலா ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, டிரோன்களை இயக்குவதற்கான 15 நாள் கட்டாய பயிற்சி அளிக்கப்படும். பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை டிரோன் மூலம் வயல்களில் தெளிப்பதற்கான கூடுதல் பயிற்சி, அந்தந்த மாநிலங்களின் முன்னணி உர உற்பத்தி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும். இந்த வழிகாட்டு நெறிமுறைகளை, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் முறையாக கடைபிடித்து, நமோ டிரோன் சகோதரிகள் திட்டத்தின் வெற்றிகரமான அமலாக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் மத்திய வேளாண் அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

*அமித் ஷா-குஜராத்*

குஜராத்தில் அகமதாபாத் நகரின் பிரானா பகுதியில் அரசு-தனியார் ஒத்துழைப்பு திட்டமாக 375 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, கழிவிலிருந்து எரிசக்தி தயாரிக்கும் ஆலையை, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று திறந்து வைத்தார். தினசரி ஆயிரம் மெட்ரிக் டன் கழிவுகளில் இருந்து 15 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட இந்த ஆலை, குஜராத் மாநிலத்திலேயே

இத்தகைய பெரிய ஆலையாக அமைந்துள்ளது. குஜராத் மாநிலத்தின் பசுமை எரிசக்தி சூழலை மேம்படுத்துவதுடன் திறம்பட்ட கழிவு மேலாண்மைக்கான எடுத்துக் காட்டாகவும் இந்த ஆலை திகழும் என அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

□ாண்டவியா-விருது

சுகாதாரம், சமூக சேவை, மனித உரிமை போன்ற துறைகளில் சிறப்பாக பங்களித்த, 15 முதல் 29 வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள், மற்றும் அமைப்புகள் 2022-23-ஆம் ஆண்டிற்கான தேசிய இளைஞர் விருதுக்கு விண்ணப்பிக்கலாம் என மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா அழைப்பு விடுத்துள்ளார். இந்த விருதுகள் வெறும் பாராட்டாக மட்டுமின்றி, அனைவரையும் உள்ளடக்கிய, முற்போக்கு இந்தியாவை உருவாக்குவதில் இளைஞர்களின் தலைமைத் துவத்தை கொண்டாடும் வகையிலும் அமைந்து இருப்பதாக, வீடியோ செய்தி ஒன்றில் அவர் கூறி உள்ளார். மத்திய உள்துறை அமைச்சகத்தின் பொது விருதுகள் இணையதளம் மூலமாக, இன்று முதல் வரும் 15-ஆம் தேதி வரை, இந்த விருதுக்கு விண்ணப்பிக்கலாம். தேசிய இளைஞர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்படும் தனிநபர்களுக்கு பதக்கம், சான்றிதழ், மற்றும் 1 லட்ச ரூபாய் ரொக்கபரிசும், அமைப்புகளுக்கு 3 லட்ச ரூபாய் ரொக்க பரிசும் வழங்கப்படும்.

வானிலை

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டியப் பகுதிகளில் இன்று வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், வரும் 7-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் கோவை, நீலகிரி, தேனி, திண்டுக்கல், கரூர், திருச்சி, தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் காரைக்கால் பகுதியிலும் ஓரிரு இடங்களில்

கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், நெல்லை,குமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழை பெய்யக் கூடும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக் கடல் பகுதிகளில் அதிக பட்சம் மணிக்கு 55 கிலோமீட்டர் வேகத்தில் சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் இன்றும் நாளையும் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் கீழ் கோத்தகிரி எஸ்டேட்டில் 11 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. பாகூர் மற்றும் காரைக்காலில் தலா 3 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

*ரயில்வே*

ரயில் டிக்கெட்டுகளை பயணத் தேதிக்கு 120 நாள் முன்பாகவே முன்பதிவு செய்யும் வசதி 60 நாட்களாக குறைத்து அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இப்புதிய நடைமுறை இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது. இதனால் டிக்கெட் பதுக்கல் வாய்ப்புகள் குறைந்து பயணிகளுக்கு அதிக டிக்கெட்டுகள் கிடைக்க ஏதுவாகும் என்று ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுவரையிலான நடைமுறையின் படி, பயணத் தேதிக்கு முன்பான 4 மாதங்களில், முதல் 2 மாதங்களில் பதிவு செய்யப்படும் 21 சதவிகித டிக்கெட்டுகள் பின்னர் ரத்து செய்யப்படுவதாக தெரிய வந்ததன் அடிப்படையில் அமைச்சகம் புதிய நடைமுறையைக் கொண்டு வந்துள்ளது. அதேசமயம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், பயணத் தேதிக்கு 365 நாள் முன்பாகவே டிக்கெட் பதிவு செய்து கொள்ளும் வசதி தொடரும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*தேப்ராய்- □றைவு*

பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுத் தலைவர் டாக்டர் பிபேக் தேப்ராய். புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் இன்று காலை காலமானார். 69 வயதான அவர் நேற்று இரவு முதல், மருத்துவமனையில்

அனுமதிக்கப் பட்டிருந்தார். டாக்டர் பிபேக் தேப்ராய் மறைவு குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார். பொருளாதாரம், வரலாறு, கலாச்சாரம், அரசியல், ஆன்மிகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்த அறிஞராக திகழ்ந்தவர் திரு பிபேக் தேப்ராய் என்றும் நாட்டின் தொன்மையான சாத்திரங்களை எளிமைப்படுத்தி இன்றைய இளைஞர்களுக்கு வழங்கும் வகையிலான ஆக்கப்பூர்வ படைப்புகள் மூலம், டாக்டர் தேப்ராய், நாட்டின் அறிவுசார் சூழலில் அழிக்க முடியாத அடையாளங்களை விட்டுச் சென்றுள்ளதாக சமூக ஊடக பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார்.

*பாதுகாப்பு செயலர்*

மத்திய அரசின் பாதுகாப்புத் துறை செயலராக, 1989-ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரி திரு ராஜேஷ்குமார் சிங் இன்று பொறுப்பேற்றுள்ளார். நேற்று ஓய்வுப் பெற்ற திரு கிரிதர் அரமனேக்கு பதிலாக அவர் இப்பதவியை ஏற்றுள்ளார். பாதுகாப்புத் துறை செயலர் பதவிக்கு மாற்றப்படும் முன்பாக திரு ராஜேஷ்குமார் சிங், மத்திய தொழில்-வணிக அமைச்சகத்தில், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக வளர்ச்சி துறைச் செயலராக பதவி வகித்து வந்தார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

தமிழ்நாடு, புதுச்சேரி உட்பட இன்று உதய நாள் கொண்டாடும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் மக்களுக்கு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வாழ்த்து தெரிவித்தார்.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, **புதுச்சேரி விடுதலை நாள்** விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதைகளை ஏற்றுக் கொண்டார்.

புதுச்சேரியில் சாகுபடிப் பரப்பு குறைந்து வருவதைக் கட்டுப்படுத்தும் வகையில், **ஹைட்ரோபோனிக் விவசாயம்** கொண்டு வரப்படும் என, முதலமைச்சர், **விடுதலை நாள்** உரையில் தெரிவித்தார்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு டிரோன் வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள, **நமோ டிரோன் சகோதரிகள்** திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை, மத்திய அரசு இன்று வெளியிட்டுள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------